**Previous Examination Date - 15-12-16**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி. 347-12

Deposition of Witness.P.W. 4

| | |
|---|---|
| Name: குமரவேல் | Father Name: ராமசாமி கவுண்டர் |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார். 06-08-19

**முதல் விசாரணை**

நான் மானூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா.1-த் தெரியும். அ.சா.1 அடிபட்டு மருத்துவமனையில் இருந்தார். அவரை போய் மருத்துவமனையில் போய் பார்த்தேன். எத்தனை வருடத்திற்கு முன்பு என ஞாபகம் இல்லை. எதனால் அடிபட்டது என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதிகோர அனுமதி வழங்கப்பட்டது.**

**அ.த.கு.வி.**

கடந்த 14-3-16-ம் தேதி நானும் தங்கவேல் என்பவரும் வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது மீனாட்சியும் அவரது மகன் ராஜேந்திரனும் அவர்களது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அது சமயம் எதிரி தங்கப்பழம் மாடுகள் மீனாட்சி கரும்பு வயலில் இறங்கியது தெரிந்து மீனாட்சி ஏன் இப்படி மாட்டை விட்டு அழிமானம் செய்கிறீர்கள் என கேட்டதற்கு தங்கப்பழம் அப்படித்தான் செய்வேன் என அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த இரும்புக்கம்பியால் மீனாட்சியின் நெற்றிக்கு மேல் அடித்து காயத்தை உண்டாக்கினார் என்றும், பின்னர் நாங்கள் கொண்டு போய் ஆஸ்பத்தியில் சேர்த்தோம் என்றும் போலிசார் விசாரணை செய்தபோது கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.